# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண். 123/2022

வாதி தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

-----------------------------------------------------------------------

பெயர் கணேஷ்குமார் வா.சா.–1

த/பெ. வீரபாண்டி

கிராமம் தொழில் யூனியன் வங்கி

தாலுகா அருப்புக்கோட்டை வயது 40

-----------------------------------------------------------------------

முதல் விசாரணை 06–04–2026.

நான் இந்த வழக்கின் வாதி. வாதி தரப்பு 1வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை வாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 20.06.1997 தேதியிட்ட வாதியின் தந்தைக்கு தெய்வாணையம்மாள் எழுதிகொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் SRO நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 03.08.2017 தேதிய வாதிக்கு அவருடைய தந்தை எழுதிகொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் SRO நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 19.09.2022 தேதிய தாவா சொத்திற்குரிய வில்லங்க சான்றிதழ் இணையதள நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) வாதி பெயரிலுள்ள மின்இணைப்பு கணினி நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) வாதி பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) தாவா சொத்திற்குரிய அரசு வழிகாட்டி மதிப்பு கணினி நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி முதல்விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S